### நெல் கொள்முதல் செய்து இருப்பு வைக்க சேமிப்புக் கிடங்குகள் அமைப்பீர்!

# விருதுநகர் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்து தாரீர்!

## சட்டப் பேரவையில் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் வலியுறுத்தல் !

**சென்னை, ஜூலை 3 - சட்டப் பேரவையில் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் விருதுநகர் தொகுதி உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன் பேசியதாவது:**



திராவிட இயக்கத்தின் தலைவராய், தந்தை பெரியாரின் மாணவராய், அறிஞர் அண்ணாவின் தம்பியாய், ஐந்து முறை தமிழக முதல்வராய், இந்தியாவிலேயே ஏன் உலகத்திலேயே விவசாயிகளின் துயரைத் துடைக்கும் திட்டமான விவசாயிகளுக்கு இலவச மின்சாரத் திட்டம், விவசாயக் கடன் முழுவதும் தள்ளுபடி, விவசாயிகள் நேரடியாக விளை பொருட்களை விற்பனை செய்ய இந்தியாவிலேயே முதன்முறையாக உழவர் சந்தைத் திட்டம், இப்படி எண்ணற்ற திட்டங்களைத் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயிகளின் முதுகெலும்பாக இருக்கும் கிராமப்புற கூட்டுறவு வங்கிகள் மற்றும் விவசாயிகள் உற்பத்தி செய்து உணவு விநியோகம் செய்யும் உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கைமீது பேசுவதற்கும், விவசாயிகளுக்கு எண்ணற்ற பல திட்டங்களைத் தந்து கொண்டிருக்கும் வாழும் கலைஞர், எங்கள் திராவிடச் சூரியன் கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன். எங்கள் திராவிட இளஞ்சூரியன் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் மாவட்ட அமைச்சர்கள் K.K.S.S.R. இராமச்சந்திரன் அவர்களையும், தங்கம் தென்னரசு அவர்களையும் வணங்குகிறேன். அவை முன்னவர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் மற்றும் பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், அரசுக் கொறடா ஆகியோர்களை வணங்கி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

**சிறுதானிய வருடம்!**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட சிறு, குறு விவசாயிகளிடமிருந்து சிறு தானிய உணவுகளான கேழ்வரகு 2023 முதல் குறைந்தபட்ச ஆதார விலையில் கிலோ ஒன்றுக்கு ரூபாய் 35.78 என கொள்முதல் செய்யப்பட்டு, இவை தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசிக்குப் பதிலாக, இரண்டு கிலோ கேழ்வரகு விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் நடப்பதாக 2023-2024 கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2023 ஆம் வருடம் ஐ.நா. சபை சிறுதானிய வருடமாக கொண்டாடப்பட வேண்டும் என கூறுகின்ற வேளையில், அரிசிக்குப் பதிலாக சிறுதானிய வகைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு இது ஊக்கம் அளிக்கும்விதமாக இருக்கும். எனவே, சிறுதானிய உணவு கொள்முதல் அதிகரித்து அதனை அனைத்து மாவட்ட பொது விநியோகக் கடைகளில் விற்பனைக்குக் கொண்டு வருவதன்மூலம் உடல் ஆரோக்கியமும், சிறுதானிய உற்பத்தியும் அதிகரிக்கும் என அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

**சேமிப்புக் கிடங்கு அமைத்துக் கொடுப்பீர்!**

விருதுநகரில் விவசாயிகளிடமிருந்து நெல்லினை கொள்முதல் செய்து, இருப்பு வைக்க சேமிப்புக் கிடங்கு போதுமான அளவில் இல்லை. எனவே, 15,000 மெட்ரிக் டன் அளவுள்ள சேமிப்புக் கிடங்கு அமைத்துக்கொடுக்குமாறு வேண்டி கேட்டுக்கொள்கின்றேன். மேலும், பொது விநியோகக் கடைகளுக்கு அனுப்பப்படும் அரிசி, பருப்பு, பாமாயில் போன்ற பொருட்கள் இருப்பு வைக்க போதுமான அளவில் சேமிப்புக் கிடங்கு விருதுநகரில் இல்லை. எனவே, 3,000 மெட்ரிக் டன் அளவு கொண்ட மேற்கூரையுடன் கூடிய சேமிப்புக் கிடங்கு அமைத்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சேமிப்புக் கிடங்குகளில் சுமை தூக்கும் தொழிலாளர்கள் பற்றாக்குறையும் உள்ளது. இதனால், உணவுப் பொருட்கள் ஏற்ற, இறக்கம் காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, தேவையான அளவில் பணியாளர்களை நியமிக்க ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வீடு தேடி ரேஷன் பொருட்கள். முதலமைச்சரின் சீரிய சிந்தனையால் உருவான மக்களைத் தேடி மருத்துவத் திட்டம், கிராமப்புற மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இதேபோன்று, முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு வீடு தேடிச் சென்று ரேஷன் பொருட்கள் வழங்கினால் மிகவும் பயனுள்ளதாக இருக்குமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சேமிப்புக் கிடங்குகள், 2023-2024 நிதிநிலை அறிக்கையின்படி, 28,000 மெட்ரிக் டன் சேமிப்புக் கொள்ளளவு கொண்ட 12 சேமிப்புக் கிடங்குகள் 54 கோடியில் கட்டப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருட்களை சேமித்து வைத்து உரிய நேரத்தில் விநியோகம் செய்ய ஏதுவாக மேலும் சில இடங்களில் சேமிப்புக் கிடங்குகளை அமைக்க ஆவன செய்யவேண்டும்.

39 சேமிப்புக் கிடங்குகள் வாடகை அடிப்படையில் செயல்படுகின்றன இதனை தவிர்க்க சேமிப்புக் கிடங்குகளை அதிகரிக்க வேண்டுமென என அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**முதல்வருக்கு நன்றி!**

திருநங்கைகளுக்கு குடும்ப அட்டை. மூன்றாம் பாலினத்தவர் என சமூகத்தினரால் புறக்கணிக்கப்பட்டவர்களுக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திருநங்கைகள் என சிறப்பு பெயரிட்டு அழைக்க ஆணையிட்டார். அதேபோன்று, தமிழக முதல்வர் அவர்கள் திருநங்கைகள் சமூகத்துடன் இணைந்து வாழும்விதமாக இதுவரை 86,986 குடும்ப அட்டைகள் வழங்கி அவர்களும் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் பயனடைய செய்த முதல்வர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திலிருந்து அரிசி, பருப்பு, சர்க்கரை மூட்டைகளில் பொது விநியோகக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது. இவைகளை பிரித்து நுகர்வோர்களுக்கு எடையாளர் கொடுக்கும்போது எடை குறைப்பு இழப்பீடு ஏற்படுகிறது. அந்த இழப்பீட்டினை ஈடு செய்ய முடியவில்லை. இதன் பாதிப்பு பொதுமக்களைச் சார்ந்துவிடுகிறது. எனவே, பொது விநியோகக் கடைகள்மூலம் வழங்கும் பொருட்களை தனி பையில் pack செய்து கிலோ கணக்கில் வழங்கினால் எடை குறைப்பு தவிர்க்கலாம் எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மண்ணெண்ணெய் ஒதுக்கீடு. ஏழையெளிய மக்கள் வாங்கக்கூடிய மண்ணெண்ணெயின் மாநிலத்தின் மொத்தத் தேவை 38,462 கிலோ லிட்டராகும். தற்போதைய ஒதுக்கீடு 20 சதவிகிதத்தைக்கூட எட்டவில்லை. ஆகவே, ஒன்றிய அரசினை மேலும் வலியுறுத்தி மாதாந்திர தேவைக்கான மண்ணெண்ணெய் வழங்க ஆவன செய்யுமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**அரிசி ஆலைகள் நவீனமயமாக்கல்!**

தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் 2013ல் ஆரம்பிக்கப்பட்டு நம் மாநிலத்தில் 2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் நாடு முழுவதும் ஒரே ரேஷன் கார்டு செயல்பாட்டில் உள்ளது. இதில் வட மாநில தொழிலாளர்களுக்கு இங்கே உணவுப் பொருள் வழங்கப்படுகிறது. பிரத்யேகமாக அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கீடு செய்தல் வேண்டும். அவர்கள் வாங்காத உணவுப் பொருட்களை regular allotmentக்கு மாற்றி ஒதுக்கீடு செய்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அரசு அரிசி ஆலைகளை நவீனமயமாக்கல். தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்கீழ் இயங்கும் 21 நவீன அரிசி ஆலைகளின்மூலம் தரமான அரிசி உற்பத்தி செய்யப்பட்டு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அரிசி ஆலைகள் நவீனமயமாக்கல் திட்டத்தின்கீழ் மூன்று கட்டங்களாக 21 நவீன அரிசி ஆலைகளும் நவீனமயமாக்கப்பட்டது. இதில் 2011 ஆம் ஆண்டு முதல்கட்டமாக நவீனமயமாக்கப்பட்ட 7 அரிசி ஆலைகளும் 13 வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து இயங்கி வருவதால் இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன. எனவே, நிதியொதுக்கி அந்த 7 அரிசி ஆலை இயந்திரங்களை திரும்ப சீரமைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**கூட்டுறவுத் துறை.**

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும். இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும். என்ற கோட்பாட்டின்படி, நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொது விநியோகத் திட்டத்தின்படி, 2001 கொரோனா தொற்றுக் காலத்தில் 2.1 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு நிவாரண நிதியாக ரூபாய் 4000ம், இரண்டாம் அலை பரவலின் உச்சத்தில் மளிகைப் பொருட்கள் சிறப்பு தொகுப்பு நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டன.

மேலும், விவசாயிகளின் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய பயிர்க் கடன் ரூபாய் 4803.95 கோடி தள்ளுபடியாகவும், மகளிர் சுய உதவிக் குழுவின் கடன் ரூ.2,750 கோடி தள்ளுபடியும் கொடுத்து மக்களை துயரத்திலிருந்து காத்தவர் நம் முதல்வர் அவர்கள் என்பதனை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பயிர்க் கடன். கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் வாங்கும் பயிர்க் கடன்களுக்கு நமது கழக ஆட்சியில் 2006-2007ல் தான் வட்டி 9 சதவிகிதத்திலிருந்து 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டது. தற்போது, முறையாக கடனை திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு முற்றிலும் வட்டி இரத்து செய்தும், கடன் வழங்கும் திட்டத்தினை முதல்வர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இதற்காக, மேலும் ஒரு முறை நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கூட்டுறவுத் தேர்தல்!**

கடந்த ஆட்சியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல் முறையாக நடத்தப்படவில்லை. இதுசம்பந்தமாக, ஏறத்தாழ 7 ஆயிரம் மனுக்கள் பெறப்பட்டு 1,100 மனுக்கள் உயர் நீதிமன்றம் வரை சென்றுள்ளன. நீதிமன்றம் கண்டனம் தெரிவித்த பின்னர் தேர்தல் முறைகேடுகளை விசாரிக்க நீதியரசர் ராஜேஸ்வரன் தலைமையில் ஆணையத்தை அமைத்தது கடந்த அரசு.

கிராமப்புற விவசாயிகளின் வாழ்வில் ஆலம் விழுதுகள்போல், தலைத்திருக்கும் கூட்டுறவுச் சங்கங்கள், குறு, சிறு விவசாயிகளுக்கு உற்றதுணையாக இருக்கின்றன. கூட்டுறவுக் கடன் சங்கங்கள் சிறப்பாக செயல்பட எதிரணியில் இருப்பவர்கள் கூட நம்மை பாராட்டும்வகையில், முறைகேடான உறுப்பினர்களை நீக்கி, புதிய உறுப்பினர்கள் சேர்த்து ஜனநாயக தேர்தலில் நம்பிக்கையுடைய நமது முதல்வர் அவர்கள் கூட்டுறவுத் தேர்தலை நடத்திக் காட்டுவார் என எதிரணியினருக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விவசாயக் கடன்!**

தற்போது விவசாயிகளுக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பிணையம் இல்லாமல் ரூபாய் 1.60 இலட்சம் பிணையத்தின் பெயரில் மூன்று இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு மூலதனச் செலவுகள் அதிகரித்து வருவதால், வெளியில் வட்டிக்குக் கடன் வாங்கி மிகவும் சிரமம் அடைகின்றனர். இதனைத் தடுக்கும்வகையில் இனிவரும் காலங்களில் பிணையம் இல்லாமல் மூன்று இலட்சமும் பிணையத்துடன் 5 இலட்சமும் கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கினால் விவசாயிகள் வாழ்வு இன்னும் சிறக்கும்.

2024-2025 ஆம் ஆண்டில் விவசாயிகளின் பயிர் கடனாக 15 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்த முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கல்வி கடன்!**

தமிழக முதல்வர் அவர்கள் தமிழகம் முன்னேற்றப் பாதையில் செல்ல அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறார்கள். அதில் முக்கியமாக கல்வி வளர்ச்சியில் நாம் முன்னேற்றப் பாதையில் செல்லவேண்டும் என்று முன்னுரிமை கொடுத்து ‘புதுமைப்பெண் திட்டம்’ ‘நான் முதல்வன் திட்டம்’ கொண்டு வந்து மாணவ மாணவியரின் கல்வித் தரம் மேம்பட எல்லோருக்கும் எளிமையாக கல்வி கிடைக்கவேண்டும் என்பதற்காக எல்லா பிரச்சினையும் நான் பார்த்துக்கொள்கிறேன். உங்களுக்குத் தேவை படிப்பு! படிப்பு! என மாணவ மாணவிகளுக்கு அன்பு கட்டளையிட்டுள்ளார்கள். தற்போது கல்வி கடன் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வழங்கப்படுகிறது. கிராமப்புற மாணவர்கள் கடன் கேட்டு அணுகுவதிலும், வங்கி பரிசீலிப்பதிலும் இடர்பாடுகள் இருப்பதனை நன்கு அறிந்து தமிழக மாணவ மாணவிகளின் பெற்றோர்களே சிந்திக்காதத் திட்டத்தை சிந்தித்து கல்வி கடன் மாவட்ட கூட்டுறவு வங்கிகளும் வழங்க வேண்டும் என்ற சிறப்பான திட்டத்தினை அறிவித்த தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனால் கிராமப்புற மாணவர்களின் உயர்கல்வி தரம் உயரும். மேலும் கிராமப்புற கூட்டுறவு வங்கிகளின் திறனும் மேம்படும் என்பதனை தங்கள் வாயிலாக இப்பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்களின் முத்தான திட்டமான கலைஞர் மகளிர் உரிமை தொகைத் திட்டம். இத்திட்டத்தினால் சுமார் ஒரு கோடியே பதினைந்து இலட்சம் பெண்கள் பயனடைந்து வருகின்றார்கள். இதற்குப் பெருமை சேர்க்கும் விதமாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதுக்கு நாற்பது வெற்றியை மகளிர் தேடித்தந்தார்கள். இத்திட்டத்தின் மூலமாக 2024-2025ல் மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் 8 இலட்சத்து 20 ஆயிரம் பேர் கணக்கு துவங்கி, மகளிர் உரிமை தொகை பெறுகின்றனர். இதன் தொடர்ச்சியாக தமிழ் மகள் தொடர் வைப்புத் திட்டம் தொடங்கப்பட்டு 18,110 தொடரா வைப்புக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த எண்ணிக்கையை மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக கூட்டுறவு வங்கிகளில், வங்கிக் கணக்குத் தொடங்குவதற்கு நாங்களும் உறுதுணையாக இருப்போம் என்று சொல்லி, இந்தத் திட்டம் அறிவித்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் பெரும்பாலான கூட்டுறவு வங்கிகளுக்கு சுற்றுச்சுவர் இல்லாமல் பாதுகாப்பற்ற நிலையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, இதேபோன்ற கூட்டுறவு நிறுவனங்களுக்கு தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய நிதியுதவியுடன் சுற்றுப்புறச்சுவர் கட்டி அதைப் பாதுகாக்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

விருதுநகர் தொகுதியில் உள்ள பள்ளி மாணவ மாணவிகள் எளிதில் கல்லூரி கல்வி படிப்பதற்கு ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியும், சட்டக் கல்லூரியும் அமைத்துத்தருமாறு முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று விருதுநகர் தொகுதியில் பட்டாசு ஆலைகள் உள்ளன. இதில் தினமும் 50 ஆயிரம் தொழிலாளர்கள் பணி புரிகிறார்கள். கடந்த ஒரு மாத காலமாக அங்கே 300 பட்டாசு ஆலைகள் மூடி கிடக்கிறது. அதைத் திறப்பதற்கு அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று விருதுநகர் மையப்பகுதியில் கௌசிகா நதி ஒடுகிறது. அந்த நதியில் மழைக்காலங்களில் தண்ணீர் அதிகமாக வருகின்ற காரணத்தினால் கரைகளில் இருபுறங்களிலும் இருக்கக்கூடிய மக்கள் சென்று வருவதற்கு ஏதுவாக அங்கே இப்போது மூன்று தரைமட்டப் பாலங்கள் இருக்கிறது. அதை மேல்மட்டப்பாலங்களாக கட்டிக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு,

அதேபோன்று விருதுநகர் மாவட்டம் ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள நான்கு வழிச்சாலையில் அடிக்கடி விபத்து ஏற்படுகின்றது. எனவே அங்கே ஒரு மேல்மட்டப்பாலம் அமைத்துத் தந்தால் விபத்துக்களைத் தடுப்பதற்கு வசதியாக இருக்கும்.

விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியம் எம்.புதுப்பட்டி ஊராட்சியில் சொக்கலிங்கம் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப பள்ளி ஆரம்பிக்க அனுமதி தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

விருதுநகர் நகராட்சி முஸ்லீம் நடுநிலைப்பள்ளியில் 650 மாணவர்கள் படித்து வருகிறார்கள் அந்தப்பள்ளியை தரம் உயர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி இருக்கிறது. அங்கு தேவையான மருத்துவர்களை நியமித்து, அந்த மருத்துவ சிகிச்சை கிடைப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று விருதுநகர் தொகுதி, சிவகாசி ஒன்றியத்தில் உள்ள எரிச்சநத்தம் கிராமத்தில் பேருந்து நிலையம் அருகில் ஒரு பொதுக்கழிப்பிடம் கட்டிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

சாலை வசதி. மருத்துவக் கல்லூரிக்குச் செல்லக்கூடிய அருப்புக்கோட்டை முக்கு ரோட்டில் இருந்து மருத்துவமனை வரையில் உள்ள சாலையை அகலப்படுத்திக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று விருது நகரில் இருந்து பழைய காலத்து கட்டடங்கள் இருக்கிறது. அதை இடித்து புதியக் கட்டடம் கட்டும்போது மின் வாரியம் கேட்கும் விதிமுறைகளுக்கு பழைய கட்டடம் இடித்துவிட்டு புதிய கட்டடத்தில் மின் இணைப்பு பெறுவதில் சிரமம் இருக்கின்றது. அதாவது விதிமுறைகளை பின்பற்றுவதில் சிரமமாக உள்ளது. எனவே, தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டட விதிகள் 2019 விதி VIன் 20(1)ல் விலக்கு அளித்து நகராட்சி வணிக வளாகம் கட்டடம் கட்டுவதற்கு சிறப்பு அனுமதி அளித்து, மின் இணைப்பு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி பாதாள சாக்கடைத் திட்டம். இத்திட்டம் தொடங்கி ரொம்ப நாள் ஆகிவிட்டது. அதில் சிறு சிறு குறைபாடுகள் இருக்கின்றது. அதை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகின்றேன்.

**தொகுதி கோரிக்கைகள்!**

விருதுநகரின் மையப்பகுதியில் உள்ள ரோஜா நகரில் ஒரு மேல்மட்ட பாலமும், பழைய சிவகாசி ரோட்டில் மேல்மட்ட பாலமும், புல்லலகோட்டையிலிருந்து வடமலைகுறிச்சி செல்லும் அணுகு சாலையில் ஒரு மேல்மட்ட பாலமும் கலைஞர் நகரில் ஒரு மேல்மட்ட பாலமும் அமைத்து தர வேண்டும். மேலும் பாவாலி முதல் அல்லம்பட்டி வரை முள் புதர்களை அகற்றி இரு புறங்களிலும் கரையை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விருதுநகர் தொகுதி, விருதுநகர், சாத்தூர் அருப்புக்கோட்டை பகுதிக்கு திட்ட மதிப்பீடு செய்து 4 லட்சம் கொள்ளவு கொண்ட கீழ்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் பேசினார்.


### திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்



**முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிகழ்வு 100 ஜீன் 2023 முதல் மே 2024 வரை சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டு, ஜீன்2024 முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வுகள் 10 . நடைபெறும் என தீர்மானித்துமுரசொலியில் அறிவிக்கப்பட்டது அதில் ஐந்து நிகழ்ச்சிகள் நடத்தி முடிக்கப்பட்டது மீதமுள்ள ஐந்து நிகழ்ச்சிகள் விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிந்தவுடன் கீழ்க்கண்ட தேதிகளில் நடைபெறும்!**

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| | | | | |
|---|---|---|---|---|
| 1.<br>9/7/24<br>9 AM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க்கை வரலாற்று தொகுப்புகளை ரீல்ஸ் தயாரித்து வெளியிடுதல் கலைஞர் 100 FB/ YOUTUBE / TWITTER தொடங்குதல்மற்றும் 100 இளைஞர்களுக்கு வலைதள வசதியுடன் கூடிய கைப்பேசி வழங்கும் நிகழ்வு | மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி | முத்தமிழ் கருணாநிதி மாவட்ட அமைப்பாளர் | **டி.ஆர்.பி.ராஜா**<br>தொழில்துறை அமைச்சர்<br>மாநில தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர்<br>சிறப்பு அழைப்பாளர்<br>**திண்டுக்கல் ஐ.லியோனி**<br>கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் |
| 2.<br>10/7/24<br>5 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் தெரு முனை பிரச்சாரம் | வார்டு எண் – 13,13A மலைக்கோட்டை பகுதி கழகம் | P.சங்கர், S.சரவண செல்வன், வட்ட கழக செயலாளர்கள் | **தமிழன் பிரசன்னா**<br>(கழக செய்தி தொடர்பு இணை செயலாளர்) |
| 3.<br>14/7/24<br>5 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் சேர்க்கும் பட்டிமன்றம் | பொதுக்குழு உறுப்பினர்கள் | எஸ்.பன்னீர் செல்வன்,<br>கே.சண்முகம்,<br>வி.தனசேகர்,<br>கே.கே.கே. கார்த்தி,<br>உ.ராஜேஸ்வரன்,<br>ஆர்.மணி மேகலை | பட்டிமன்றத்தை துவக்கி வைப்பவர்<br>**தங்கம் தென்னரசு,**<br>நிதித்துறை அமைச்சர்<br>விருதுநகர் வடக்கு மாவட்ட கழக செயலாளர்<br>கலைமாமணி சொல்வேந்தர்<br>**சுகிசிவம்**<br>(பட்டிமன்ற நடுவர்) மற்றும் குழுவினர்<br>தலைப்பு<br>கலைஞரை உலகம் புகழ பெரிதும் காரணம்எழுதுகோலே!<br>“செந்தமிழ்செல்வி”<br>திருமதி சாந்தாமணி<br>“சிந்தனை செல்வர்”<br>சிவசக்தி வடிவேல்<br>“சொல்லரசி”<br>பேராசிரியர் பர்வின் சுல்தானா<br>செங்கோலே!<br>“கவிஞர்” மதுக்கூர் ராமலிங்கம்<br>“முனைவர்” திருமதி. எழிலரசி<br>“நகைச்சுவை நயாகரா”<br>செ.மோகன சுந்தரம் |
| 4.<br>20/7/24<br>9 AM | மாணவர் களிடேயே வினாடி, வினா போட்டிகள் மற்றும் “தேதி சொல்லும் சேதி” வரலாற்று குறிப்புகள் அடங்கிய நூல் வெளியீடு | மாநகர மாவட்ட பிரதிநிதிகள் | பா. விஜயபாலன்,<br>பி.ஜான் செல்லதுரை,<br>கே.என்.நலங்கிள்ளி,<br>கே.முகேஷ் குமார்,<br>என்.மோகன்,<br>பி.மணிகண்டன்,<br>ஆர்.அருண் சன்னாசி,<br>கே.ஏ.ராஜேஷ்,<br>வ.கண்ணதாசன்,<br>பி.கோபிநாத், | புத்தகம் வெளியிடுபவர்<br>**ஆ.ராசாஎம்.பி.,**<br>கழக துணை பொது செயலாளர்,<br>புத்தகம் பெற்றுகொள்பவர்<br>**பி.கே.சேகர்பாபு**<br>இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்,சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர்<br>மாணவ-மாணவியருக்கு பரிசு வழங்குபவர்<br>**பூச்சி முருகன்**<br>தலைமை நிலைய அலுவலகச் செயலாளர் |
| 5.<br>21/7/24<br>5 PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பாடும் “அரசியலில் கலைஞர்” என்ற தலைப்பில் கூட்டணி கட்சி சொற்பொழிவாளர்கள் கலந்துகொள்ளும் கருத்தரங்கம் | திருச்சி மாநகர கழகம் (கிழக்கு) | மு.மதிவாணன், மாநகர கழக செயலாளர் | கருத்தரங்கத்தை துவக்கி வைப்பவர்<br>**கவிஞர் வைரமுத்து**<br>கருத்தரங்க பங்கேற்பாளர்கள்<br>எஸ்.ஜெகத்ரட்சகன் (தி.மு.க),<br>பீட்டர் அல்போன்ஸ் (காங்கிரஸ்),<br>தோழர் மகேந்திரன் (கம்யூனிஸ்ட்),<br>மா.செ.சிந்தனை செல்வன் (வி.சி.க).<br>செந்தில் அதிபன் (ம.தி.மு.க),<br>ப.அப்துல் சமது (ம.ம.க) |

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி**

செயலாளர் -

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.